TNRM010037032025



**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்**

**முன்னிலை– திரு.ஏ.கே.மெஹ்பூப் அலி கான், B.L.M.,L.L.M.,PG.D.PM/IR, Dip.in.J.J & J.Psy., PG.D.D.F.,**
**முதன்மை மாவட்ட நீதிபதி, இராமநாதபுரம்.**

**2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11–ம் நாள் புதன்கிழமை**

**திருவள்ளுவர் ஆண்டு ஸ்ரீ விசுவாவசு வருடம் மாசி மாதம் 27 ம் நாள் புதன்கிழமை**

**Tr.O.P.No.84/2025**

**CNR No.TNRM01-003703-2025**

ஆர். பானுமதி – மனுதாரர்

/எதிர்/

1. ஆர். குருசாமி
2. ஆர். சண்முகம்
3. கே. அமராவதி
4. கே. ரேவதி
5. கே. முத்துலெட்சுமி
6. கே. சாந்தி
7. கே. மீனாம்பாள்
8. கே. காளீஸ்வரி
9. கே. சித்திரைச்செல்வி
10. கே. கல்பனா – எதிர்மனுதாரர்கள்

**சார்பு நீதிமன்றம், இராமநாதபுரம்**

**O.S.No. 75/2024**

ஆர். பானுமதி – வாதி

/எதிர்/

1. ஆர். குருசாமி
2. ஆர். சண்முகம்
3. கே. அமராவதி
4. கே. ரேவதி
5. கே. முத்துலெட்சுமி
6. கே. சாந்தி

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:57:30 +0530

7. கே. மீனாம்பாள்
8. கே. காளீஸ்வரி
9. கே. சித்திரைச்செல்வி
10.கே. கல்பனா

– பிரதிவாதிகள்

**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராமநாதபுரம்**

**O.S.NO.169/2023**

1. ரேவதி
2. முத்துலெட்சுமி
3. சாந்தி ... வாதிகள்

/எதிர்/

1. ஆர். குருசாமி
2. ஆர். சண்முகம்
3. ஆர். பானுமதி
4. கே. மீனாம்பாள்
5. கே. காளீஸ்வரி
6. கே. சித்திரைச்செல்வி
7. கே. கல்பனா

– பிரதிவாதிகள்

இம்மனுவானது இறுதியாக என் முன்னர் 06.03.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.சுந்தர்ராஜன் அவர்கள் ஆஜராகியும், 3,4,5,6 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.அஜய்குமார் அவர்கள் ஆஜராகி எதிருரை தாக்கல் செய்யாமலும், 1, 2, 7 முதல் 10 எதிர்மனுதாரர்களை அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரை கேட்கப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்..

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:57:35 +0530

**உத்தரவு**

இம்மனுவானது மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் ஓ.எஸ்.எண்.169/2023 வழக்கை இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்தும், மேற்படி வழக்கினை இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் ஓ.எஸ்.எண்.75/2024 ல் கண்ட வழக்குடன் சேர்த்து **(Joint Trial)** நடத்த உத்தரவிட வேண்டுமென்று கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 24–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் பின்வருமாறு**:–

i) மனு 1,2 லக்க சொத்துக்களில் மனுதாரருக்குரிய 3/5 பங்கு சொத்தையும், மனு 3 முதல் 6 இலக்க சொத்துக்களில் மனுதாரருக்குரிய 1/5 பங்கு சொத்துக்களையும் பாகப்பிரிவினை செய்து தரக்கோரி இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.75/2024 ல் வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கில் 10 ம் பிரதிவாதியை பொறுத்து சம்மன் சார்பு செய்ய வாய்தா ஏற்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

ii) அதேபோன்று மனு 1,2 இலக்க சொத்துக்களை பொறுத்து 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் அவர்களுக்குரிய 1/5 பங்கு சொத்தினை பிரித்து தரக்கோரி இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.169/2023 பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்து மேற்படி வழக்கானது விசாரணைக்காக வாய்தா ஏற்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது.

iii) மேற்படி இரண்டு வழக்குகளும் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த வழக்குகள் என்பதால் ஒரு வழக்கு சாராம்சத்தைக் கொண்டதாகும். மேற்படி இரு

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:57:38 +0530

வழக்குகளிலும் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஒன்றாகும். எனவே மேற்படி 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள வழக்கை மாற்றம் செய்து இரண்டு வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாதுபோனால் மனுதாரருக்கு வீண் கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராமநாதபுரத்தில் உள்ள ஓ.எஸ்.எண்.169/2023 என்ற வழக்கை சார்பு நீதிமன்றம், இராமநாதபுரத்திற்கு மாறுதல் செய்து அங்கு நிலுவையில் உள்ள ஓ.எஸ்.எண்.75/2024 என்ற வழக்குடன் சேர்த்து (Joint Trial) நடத்த உத்தரவிட வேண்டுமென்று கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 1, 2, 7 முதல் 10 எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லாததால் வருகையில்லா எதிரவராகத் தீர்மானிக்கப்பட்டுள்ளார்கள். 3, 4, 5, 6ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்உரை தாக்கல் இல்லை என்று மனுவில் மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

4. <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்</u>

மனுதாரர்கள் மனுவில் கோரியுள்ளதுபோல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராமநாதபுரத்தில் உள்ள ஓ.எஸ்.எண்.169/2023 என்ற வழக்கை சார்பு நீதிமன்றம், இராமநாதபுரத்திற்கு மாறுதல் செய்து அங்கு நிலுவையில் உள்ள ஓ.எஸ்.எண்.75/2024 என்ற வழக்குடன் சேர்த்து (Joint Trial) நடத்த உத்தரவிட வேண்டுமென்று கோரி உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 24-ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:57:42 +0530

**<u>தீர்வு</u>**

**5.** மனுதாரர்கள் தரப்பு கேட்கப்பட்டது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தனது வாதுரையின்போது, இம்மனுவின் மனுதாரர் ஓ.எஸ்.75/2024 என்ற வழக்கில் வாதியாக இருந்து இம்மனுவின் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக பாகப்பிரிவினை பரிகாரம் கோரி சார்பு நீதிமன்றம், இராமநாதபுரத்தில் ஓ.எஸ்.எண்.75/2024 என்ற வழக்கைத் தாக்கல் செய்து மேற்படி வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருகிறது என்றும் அதேபோன்று 4 முதல் 6 எதிர்மனுதாரர்கள் பாகப்பிரிவினை பரிகாரம் கோரி இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் ஓ.எஸ்.எண்.169/2023 என்ற வழக்கைத் தாக்கல் செய்து மேற்படி வழக்கானது விசாரணைக்காக நிலுவையில் இருந்து வருவதாலும், மேற்படி வழக்குகளில் உள்ள சாராம்சங்கள் ஒன்றாக உள்ளது என்பதாலும், எனவே மேற்படி பாகப்பிரிவினை கோரி இரு வேறு நீதிமன்றங்களில் இரண்டு வழக்குகள் உள்ளதால் இரண்டு வழக்குகளையும் ஒரே நீதிமன்றத்தில் விசாரணை செய்தால் மட்டுமே, மாறுபட்ட இரண்டு தீர்ப்புகள் வழங்கப்படுவது தவிர்க்கப்படும் என்றும் மேற்படி வழக்குகளையும் ஒரே நேரத்தில் விசாரித்தால் மட்டுமே வழக்கு மூலங்கள் தொடர்பான உண்மை நிலவரங்களை நீதிமன்றத்திற்கு தெளிவுபட எடுத்துரைக்க இயலும் என்றும் மேற்படி இரண்டு வழக்குகளையும் ஒன்றாக விசாரிக்கும்பட்சம் மேற்படி வழக்குகளில் முரண்பட்ட உத்தரவு வழங்காமல் சரியானதொரு தீர்ப்பினை வழங்குவதற்கு ஏதுவாக அமையும் என்றும் வாதுரைத்தார்.

**6.** இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் வழக்கு ஆவணங்களான சார்பு நீதிமன்றம், இராமநாதபுரத்தில் நிலுவையில் இருந்து வரும் ஓ.எஸ்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:57:46 +0530

எண்.75/2024 என்ற வழக்கின் வழக்குரையின் நகலும், இராமநாதபுரம் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் ஓ.எஸ்.எண்.169/2023 என்ற வழக்கின் வழக்குரையின் நகலும் பரிசீலனை செய்யப்பட்டது.

**7.** மேலும் இரண்டு வழக்குகளிலும் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனையும், இரண்டு வழக்குகளிலும் உள்ள மனுதாரர்களின் ஆவணங்களும், சாட்சியங்களும் ஒன்றாக இருந்து வருவதாலும், பாகப்பிரிவினை பரிகாரம் கோரி ஒரே தரப்பினரிடையே இரு வேறு நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்றால் முரண்பட்ட தீர்வு ஏற்பட வாய்ப்பு உள்ளது எனவும், இரண்டு மாறுபட்ட நீதிமன்றத்தால் முரண்பாடான தீர்வுகள் வழங்கப்படுவது தவிர்க்கப்பட வேண்டும் என்பதால் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராமநாதபுரத்தில் உள்ள ஓ.எஸ்.எண்.169/2023 என்ற வழக்கை சார்பு நீதிமன்றம், இராமநாதபுரத்திற்கு மாறுதல் செய்து அங்கு நிலுவையில் உள்ள ஓ.எஸ்.எண்.75/2024 என்ற வழக்குடன் ஒருசேர இணைத்து **(Joint Trial)** நடத்துவதற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகளை மறுத்து எதிருரையோ சாட்சியமோ முன்வைத்து வழக்காடாத நிலையில், நீதியின் நலன் கருதி மனுதாரர்களின் கோரிக்கை ஏற்கப்பட்டு இம்மனு அனுமதித்து உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராமநாதபுரத்தில் நிலுவையில் இருந்து வரும் ஓ.எஸ்.169/2023 வழக்கை இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்திற்கு மாறுதல்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:57:53 +0530

செய்து, இராமநாதபுரம் சார்பு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் ஓ.எஸ்.75/2024 என்ற வழக்குகளுடன் சேர்த்து **(Joint Trial)** நடத்த உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:57:58 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள் ..** -இல்லை-

**எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் ..** -இல்லை-

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:58:03 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**நகல்**

1) சார்பு நீதிமன்றம், இராமநாதபுரம்.
2) மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், இராமநாதபுரம்.